**CC.NO. 232/2019**

**எதிரி ஆஜரில்லை. 317 குவிமுசவின் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**அ.சா.1, சீனிவாசன், த/பெ. கருப்பையன், சி.எம்.பி.எண்.4640/2022, தேதி 09.12.2022 மனு உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

1. நான் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். சம்பவ சமயத்தில் நான் கரூர் பாலாஜி ஒயின்ஷாப் பாரில் வேலை பார்த்தேன். அந்த சமயத்தில் பாருக்கு பக்கத்திலேயே ரூம் எடுத்து தங்கியிருந்தேன். நான் முதல் விசாரணையில் சொன்னது போல எப்போதும் காய்கறி வாங்க நான்தான் செல்வேன். நான் காமராஜ் மார்க்கெட்டில் காய் வாங்க செல்வேன். சம்பவம் நடந்ததாக சொல்லும் சமயத்தில் நான் மட்டும் தனியாகத்தான் சென்றேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் சமயத்தில் அங்கு 4 நபர்கள் இருந்தார்கள். புகாரை போலிசார் எழுதினார்கள் அதில் நான் கையொப்பம் செய்தேன். இவ்வழக்கின் எதிரியை எனக்கு சம்பவத்திற்கு முன்னதாகவே தெரியும் என்றால் சரிதான். எதிரி எங்களது பாரின் தினசரி வாடிக்கையாளர் என்றால் சரிதான்.

2. நான் முதல் விசாரணையில் சொன்னது போல எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நான் பொய்யாக எதிரி மீது புகார் கொடுத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. புகாரை நான் படித்து பார்க்கவில்லை, என்னிடம் புகாரில் கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள். போலிசாரால் தயாரிக்கப்பட்ட பொய்யான புகாரில் நான் கையொப்பம்

செய்துவிட்டு நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**